BRAMPTON Service and Information Update

**கோவிட்-19 பற்றிய புது செய்தி: ப்ராம்ப்ட்டன் நீதிமன்ற கட்டிடத்தினுள் வருகை தருவதற்கு முன்பாக கட்டாயமான நோய்கண்டறிதல்**

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 28, 2020) – நவம்பர் 23, திங்கட்கிழமையன்று, ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் *ஒன்ட்டேரியோவை பாதுகாப்பாகவும் திறந்த நிலை கட்டுக்கோப்புக்குள் வைப்பதற்கான*, பழுப்புநிற (அதி தீவிர) ஊரடங்கு நிலைக்குள் ப்ராம்ப்ட்டன் நகரம் நுழைந்தது. இதன் விளைவாக எண் 5, ரே லாஸன் புலிவார்ட்-இல் அமைந்திருக்கின்ற ஒன்ட்டேரியோ நீதித்துறையின் மாகாண குற்றங்களுக்கான நீதிமன்றமானது (Ontario Court of Justice Provincial Offences Court) கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

நவம்பர் 23, திங்கட்கிழமை துவங்கி, மாகாண குற்றவியல் நீதிமன்ற கட்டிடத்திற்கு வருகை புரியும் எவரும் கட்டாயமான ஒரு ஆன்லைன் கோவிட்-19 நோய்கண்டறிதலை நிறைவேற்றியாக வேண்டும். நீங்கள் நீதிமன்ற கட்டிடத்திற்குள் நுழைய முடியுமா அல்லது முடியாதா என்பதையும், அடுத்து நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் இந்த மதிப்பீடு தீர்மானிக்கும்.

நீதிமன்ற கட்டிடத்திற்கு வருகை தருபவர்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு குறிகள் மற்றும் அறிவுரைகளையும், கோவிட்-19 க்கான பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றுமாறு நினைவூட்டப்படுகிறார்கள்.

நீங்கள் நீதிமன்ற கட்டிடத்திற்கு அத்தியாவசியமாக வந்தே ஆக வெண்டும் என்றால் மட்டுமே வரவும். பல எண்ணிக்கையிலான நீதித்துறை சேவைகள் ஆன்லைனிலேயே கிடைக்கின்றன. மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: brampton.ca/courtservices .

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca